பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 618 **நாள்: 26.10.2026**

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர் 10 ஆவது தெருவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன் அவர்கள், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உடற்பயிற்சிக் கூடத்திற்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-98க்குட்பட்ட அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர் 10ஆவது தெருவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உடற்பயிற்சிக் கூடத்திற்கு இன்று (26.10.2026) அடிக்கல் நாட்டினார்.

இந்த உடற்பயிற்சிக் கூடமானது நவீன உடற்பயிற்சி சாதனங்களுடன், 812 சதுர அடி பரப்பளவில் ரூபாய் 42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு, மாமன்ற உறுப்பினர் செல்வி ஆ.பிரியதர்ஷினி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.